---

## 1.1 அபிப்பிராயம்

நவீன தொழில்நுட்பவியல் ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வாளரின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவகத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வரும் ரூபா 1,604,037 தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட மொத்த கடன் மீதியில் ரூபா 22,644 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நினைவூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த அமைச்சிற்கு தெரியப் படுத்தப்பட்டுள்ளது. | மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 195,858 பெறுமதியான சேவைகளுக்காக | 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 52,500 தொகை கிடைத்துள்ளது. ஏனைய பெறுவனவுகள் தொடர்பாக | பட்டியல்களுக்காக பணத்தை விரைவில் அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட பட்டியல்களுக்காக விநியோகிக்கப்பட்ட பட்டியல்கள் மற்றும் 2017 ஆம் ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2019 யூலை 31 ஆந் திகதி வரை 24 மாதங்களுக்குள் உடன்படிக்கை மற்றும் கடப்பாடொன்று இல்லாமல் தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த சேவைகளுக்காக விநியோகிக்கப்பட்ட ரூபா 2,292,945 பட்டியல் களுக்காக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நினைவூட்டல்கள் கணக்குகள் பிரிவினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. உடன்படிக்கையின் பிரகாரம் தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு குறித்த காலப்பகுதிக்காக சேவைகள் பெற்றுக் கொண்டுள்ளதால் கிடைக்க வேண்டிய வருமானமாக பட்டியல்படுத்தப்பட்டுள்ளதுடன் பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை வேண்டும். |

### 1.5.2 முற்பணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயல்நிமித்த கட்டுநிதி அது வழங்கப்பட்ட பணி நிறைவடைந்து 10 நாட்களுக்குள் செயல்நிமித்த கட்டுநிதி கணக்குப் பிரிவிற்கு மீண்டும் தீர்வுசெய்ய வேண்டிய போதிலும் 30 சர்ந்தப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 2,156,900 ஆன செயல் நிமித்த கட்டுநிதி தீர்ப்பனவு 02 மாதம் முதல் 53 நாட்கள் வரையான காலதாமதத்துடன் தீர்வு செய்யப்பட்டிருந்தன. | நிறுவகத்தின் வெவ்வேறு செயயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தேவைப்பாடுகளின் பிரகாரம் செயல்நிமித்த கட்டுநிதி அதிகாரம் மற்றும் அங்கீகாரத்தின் பேரில் வழங்கப்படுவதுடன் குறித்த பணி நிறைவடைந்தவுடன் மீண்டும் தீர்வுசெய்யும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும்.எனினும் நடைமுறை ரீதியான சிகக்ல்கள் மற்றும் நிறுவன செயற்பாடுகள் உள்ளக ரீதியான செயற்பாடுகளில் உருவாகும் தவிர்க்க முடியாத தாமதங்கள் காரணமாக சில சந்தர்ப்பங்களில் கட்டுநிதி தீர்வின் போது தாமதங்கள் ஏற்படுகின்றன. வேண்டிய. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பணி நிறைவடைந்ததுட ன் செயல்நிமித்த கட்டுநிதி தீர்வுசெய்ய வேண்டும் |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் ஏதேனும் விசேட பணிக்காக பதவிநிலை உத்தியோகத்தரொ ருவருக்கு மாத்திரம் ஒரு | பண முற்பணம பெற்றுக்கொண்டு ஆளில்லாத விமானங்கள் (UAV) செயற்திட்டத்தில் வேலத்திட்டத்தின் ஆரம்பத்தை வடிவமைப்பதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 செயல்நிமித்த கட்டுநிதி வழங்க கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியும். இந்நிதி எல்லைகளை மிகைப்பதற்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பிரதான நிதி கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் வேண்டுகோள் ஒன்றுடன் பொது திறைசேரியின் முன் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதும் மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 560,000 கூட்டுத்தொகையான ரூபா 100,000 ஐ மிகைத்த கட்டுநிதி திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தது | தேவையான பொருட்கள் இணையத்தளத்தின் ஊடாக சர்வதேச சந்தையில் மாத்திரம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் செலவு அட்டையொன்று (பண முற்பணத்துடன்) பயன்படுத்தி சர்வதேச இணையத்தள நிலையமொன்றிலிருந்து வடிவமைப்பு விசேட பகுதி கொள்வனவு பெறுகை வழிகாட்டி 2018 இன் பெறுகை வழிகாட்டல் 2.5 (சீ) மற்றும் 3.1.6 இன் வழிகாட்டலுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. நிறுவகத்திடம் கம்பனி செலவு அட்டையொன்று இல்லையென்பதால் தனியார் செலவு அட்டையொன்று (பண முற்பணத்துடன்) பயன்படுத்தப்பட்டது. | முற்பணம் வழங்கும் போது திறைசேரியின் அங்கீகாரத்தின் பேரில் முற்பணம் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 3,457,220ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 17,518,946 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 20,976,166 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இயயலுமை மேம்பாட்டுச் செலவினம் ரூபா 41 மில்லியனால் அதிகரித்த போதும் அரசின் மானியங்கள் பெறுவனவு ரூபா 60 மில்லியனாலும் ஏனைய வருமானங்கள் ரூபா 2 மில்லியனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தமது நிறுவனத்திற்கு வருமானம் உழைப்பதற்காக பயன்படுத்தும் தொலைத்தொடர்பு கோபுரம் முறையாக பராமரிக்கப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்காமை காரணமாக நிறுவகத்திற்கு 2019 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் கோபுரத்தின் வருமானம் இழக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. 2019 யூலை முதல் இழக்கப்பட்ட வருமானம் உடன்படிக்கயின் பிரகாரம் | 2017.08.01 ஆந் திகதி முதல் 2019.08.19 ஆந் திகதி வரையில் தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் எமது நிறுவனத்தில் அமைந்துள்ள கோபுரத்திற்குரிய சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட துடன் | தொலைத்தொடர்பு கோபுரம் முறையாக பராமரிக்கப்பட்டு வருமானம் உழைப்பதற்கும் சேவை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

| | | |
|---|---|---|
| மாதமொன்றுக்கு ரூபா 102,763 வீதமாக இருந்தது. | அக்காலப்பகுதியில் கோபுர பாராமரிப்பு தொடர்பாக எவ்வித கோரலொன்று அவர்களால் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட வில்லை.கோபுரம் தொடர்பாக கோரப்பட்டுள்ள தொழில்நுட்ப அறிக்கை மற்றும் இடிதாங்கி பாதுகாப்பு தொடர்பாக உள்ள அறிக்கை ஆகிய இரண்டு அறிக்கைகளும் நிறுவகத்திற்கு கிடைத்துள்ளதால் அது தொடர்பாக நிறுவனத்தினால் எடுக்கப்பட்டு வருகின்றது. | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஒக்தோபர் 12 முதல் இரண்டு ஆண்டு வருட உத்தரவாதத்துடன் CFL மற்றும் LED மின்குமிழ்களின் செயலாற்றல் பரிசோதனை மற்றும் மின்சக்தி செயலாற்றல் பரிசோதனை என்பவற்றிற்காக கொள்வனவு செய்யப்பட்ட விளக்கு பரிசோதனை முறைமையின் (Light Measurement system) உத்தரவாதக் காலத்தின் இறுதி திகதி 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதியாக இருந்ததுடன் 2017 ஒப்தோபர் 11 ஆன திகதியான அதாவது உத்தரவாத காலத்தனுள் ரூபா 925,000 பெறுமதியான Power Analyzer (xitron 2801) இயந்திரம் பழுதுடைந்திருந்தது. இது உத்தரவாத காலத்தினுள் இடம்பெற்றிருந்ததால் அதனை மீண்டும் திருத்தம் செய்வதற்கு அல்லது அதற்குப் பதிலாக புதிய இயந்திரமொன்றை | விளக்கு பரிசோதனை முறைமை மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களில் பிழைகள் இரண்டு சந்தர்ப்பங்களில் உருவாகியதால் குறித்த இயந்திரத்தின் உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தமையால் கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஒன்றுடன் ஒன்று தொடர்பாத வெவ்வேறு பிழைகள் காரணமாக உபகரண தொகுதி செயலற்று காணப்பட்டன. ஆதலால் உபகரண வழங்குனர் ஊடாக உற்பத்திக் கம்பனி யான ஐக்கிய அமெரிக்க லெம்ஷிசியர் (labsphere) கம்பனியுடன் செயற்படும் போது கருத்திற் கொள்ளக் கூடிய | உத்தரவாத காலப்பகுதியில் திருத்தங்களை செய்யும் போது அதனை விரைவாக நிறைவேற்ற முடியாவிட்டால் அந்நிறுவனத்திடமே மேலதிக உபகரணங்களை பெற்றுக்கொண்டு முறைமையை தொடர்ச்சியாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2019 யூன் 25 ஆந் திகதி புதிய இயந்திரமொன்று அந்நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. உத்தரவாத காலத்தில் இயந்திரம் தொடர்பாக வெளிப்படுத்தாமல் புதிய கொள்வனவு சிக்கலொன்றாக இருந்தது. அவ்வாறே 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி அளவில் mini computer உபகரணமும் செயற்படாமை காரணமாக விளக்கு பரிசோதனை முறைமை செயலற்று போயிருந்தது. அவ்வாறே 2017 ஒக்தோபர் 11 ஆந் திகதி முதல் 2018 நவம்பர் 09 ஆந் திகதி வரை 13 மாத காலப்பகுதியில் இம்முறைமை செயலற்று இருந்ததுடன் அத்தவறு திருத்தம் செய்யப்பட்டு ஒரு வாரம் கழிந்ததன் பின்னர் அதாவது 2018 நவம்பர் 19 ஆந் திகதி அளவில் ரூபா 2,352,000 பெறுமதியான Amatek Power Supply உபகரணமும் செயலற்று போயிருந்தன. ரூபா 15,479,510 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட முறைமை 02 ஆண்டுகள் கடந்ததன் பின்னர் 03 மேலதிக உபகரணங்கள் செயலற்று இருந்தமையால் செலவிடுவதற்கு நேர்ந்த மேலதிக செலவினம் ரூபா 3,277,000 ஆக இருநதது. | காலமொன்று தேவைப்படும். | |
| (ஆ) | ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடொன்றாக தொடர்பாடல் பிரிவு மற்றும் தொழில்நுட்ப பிரிவு என்பன இணைந்து நூலக வளவில் RFID தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் அத்தொழில்நுட்பத்தை நாட்டினுள் விரிவுபடுத்துவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று நிறுவனம் தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆதர் சீ கிளார்க் நிறுவகத்தின் நூலகத்தில் உள்ள புத்தகங்கள் 9000 புத்தகங்களை PURNA மென்பொருள் தரவு களஞ்சியம் மற்றும் RFID LAS firmware இடையே தொகுக்கும் வகை அடிப்படையில் தரவுகளின் ஆரம்ப அறிக்கையில் மேலதிகமாக இரண்டு துறைகளை ஸ்தாபிப்பதற்காக நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் குறிதத | பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சிகளினூடாக சமூக பொருளதார நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொழில்நுட்ப PURNA மென்பொருள் வடிவமப்பாளர்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். இது இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்படுவதுடன் அது முழுமையாக உள்நாட்டு உற்பத்தியாக இருந்ததுடன் விசேட நூலகத் தேவைப்பாடுடைய தனியார் கம்பனியொன்றுடன் ஒத்துழைப்பு உற்பத்தியாக நூலகங்களுக்கு விற்பனை செய்வது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது காணப்படும் கிரயம் ரூபா 4,104,435 தொகையான இருப்புகளை நிறுவகத்தின் பயனுள்ள செயற்பாடொன்றிற்கு ஈடுபடுத்துவதற்கு அல்லது தேவைப்பாடொன்றுள்ள வேறு நிறுவனமொன்றுக்கு குறித்துரைக்கப்பட்ட நடைமுறையின் பிரகாரம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இருப்பு உருப்படிகளிலிருந்து கூடுதலான அளவு ஆராய்ச்சி மற்றும் அபவிருத்தி செயற்பாடுகளுக்கு உரிய இலத்திரனியல் உருப்படிகளாக இருந்ததுடன் அவை செயற்திட்டங்களின் தன்மையின் பிரகார் காலத்திற்கு காலம் பயன்படுத்தும் தேவைப்பாடு உருவாகின்றது. அவ்வாறு அந்த இலத்திரனியல் உருப்படிகளை திறந்த சந்தையில் நேரடியாக கொள்வனவு செய்வதற்கு முடியாதுள்ளது. அதனால் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி தேவைப்பாடுகளின் பிரகாரம் கூடிய பெறுமதியொன்றுடன் இருப்பு சொத்துக்கள் பேணும் தேவைப்பாடொன்று நிறுவகத்திற்கு காணப்படுகின்றது. அவ்வாறு நீண்டகாலம் அசைவற்று காணப்படும் இருப்பு உருப்படிகளை இனங்கண்டு அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு உருப்படிகளை கொள்வனவு செய்யும் போது தேவைப்பாட்டினை இனங்கண்டு அதற்கமைய கொள்வனவு செய்ய நடவடிக்கை வேண்டியதுடன் காணப்படும் உருப்படிகளில் இருந்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி முதல் ஓராண்டு காலப்பகுதிக்காக இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை 2017 யூல 31 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. ஆதர் சீ கிளார்க் நிலையத்தினால் 2017 ஆகஸ்ட் 01 முதல் 2022 யூலை 31 ஆந் திகதி வரை 05 ஆண்டு காலப்பகுதிக்கு உடன்படிக்கை தயார்செய்யப்பட்டு ஆண்டு தோறும் புதுப்பிக்கும் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் 2020 பெப்ரவரி கணக்காய்வு திகதி வரை அந்த உடன்படிக்கை லங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2019 யூலை 31 ஆந் திகதியின் பின்னர் ஆதர் சீ கிளார்க் நிலையத்திடமிருந்து சேவை பெற்றுக்கொள்ளல் இடம் பெறவில்லை. | பின்னர் 2017.08.01 ஆந் திகதி முதல் 2022.07.31 ஆந் திகதி வரை 05 ஆண்டு களுக்காக உடன்படிக்கை வரைவு நிறுவகத்தினால் 2018.05.02 ஆந் திகதிஇலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு தொடர்புபட்டிருந்தது. அதற்கு பொறுப்பேற்றலாக இல்லாதிருந்தமையால் முறையே 2018.08.07, 2018.09.21, 2018.11.30 ஆம் திகதிகளில் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. 2019.03.28 ஆந் திகதி இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் இவ்வரைவு உடன்படிக்கையை 05 ஆண்டுகள் வரை அங்கீகரித்திருந்ததுடன் அதன் பிரகாரம் குறித்த வரைவு உடன்படிக்கை அங்கீகரிக்கப்பட்டு இறுதி உடன்படிக்கை தயாரித்து அனுப்புமாறு நிறுவகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவனத்தினால் 2019.05.03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த உடன்படிக்கையின் இரண்டு பிரதிகளுடன் கையொப்பமிட்டு இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு சபையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2019 யூன் 17 ஆந் திகதிய TRC/SM/FMMS/RMS/KAT/GEN/ 165 ஆம் இலக்க கடிதம் மூலம் இலங்கை தொலைத் | 2017.08.01 ஆந் திகதி முதல் 2022.07.31 ஆந் திகதி வரை உத்தேச உடன்படிக்கை அவ்வாறிருக்கையில் | நிறுவகத்தின் வருமான உழைக்கும் செயற்திட்டங்களை முறையாக |

தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் இணக்கப்பாடு தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீடு இன்றி தொலைத் தொடர்புகள் கோபுரம் தொடர்பாக தகைமை சான்றிதழொன்றை வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதும் 2019 ஆகஸ்ட் 19 ஆந் திகதி வரையில் அவ்வறிக்கை வழங்காமை காரணமாக 2019 யூலை 31 இற்கு பின்னர் ஆதர் சீ கிளார்க் நிலையத்தின் கோபுரத்திலிருந்து சேவைகள் பெற்றுக்கொள்வது நிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2019.06.17 ஆந் திகதி மீண்டும் கோபுரத்தின் தரச்சான்றிதழொன்றும் இடிதாங்கி பாதுகாப்பு தொடர்பாக அறிக்கையொன்று தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் கோரப்பட்டது. கோபுரத்தின் தொழில்நுட்ப அறிக்கை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள துடன் இடிதாங்கியின் பாதுகாப்பு தொடர்பான அறிக்கை பெற்றுக்கொள்ளும் பொருட்டு நிறுவகத்தின் இலத்திரனியல் பிரிவுத் தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டது. மொறட்டுவ பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தொழில்நுட்ப அறிக்கை 2020 சனவரி மாதத்தின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் உரிய இரண்டு அறிக்கைகளும் பெப்ரவரி மாத அரம்பத்தின் போது தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் குறித்த சேவை பெற்றுக் கொள்வது தொடர்பாக அந்நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்மானமொன்று எடுப்பதற்கு உள்ளது.

பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நூலகத்தை பயன்படுத்துவதற்காக பாடசாலை ாணவர்கள், பல்கலைக்கழக மாணவரகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடங்களுடன் தாடர்புடைய அக்கரை செலுத்தும் தரப்பினருக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (அ) நூலகத்திலுள்ள அதிகளவிலான புத்தகங்கள் பயன்பாடின்றி இருப்பது அவதானிக்கப்பட்டதடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறு பயன்படுத்தப்பட்ட விசிறிகளின் எண்ணிக்கை 10 இற்கு குறைவாக இருந்தனர். | (i) நூலகம் அறிவினை வழங்கும் நிறுவனமொன்றாக இருப்பதுடன் மறுவலமாக (Virtual) மற்றும் வெவ்வேறு சமூக ஊடகங்களினூடாக நிறுவகம் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி பதவியணியின் விசிறிகளின் மற்றும் நிறுவகத்தின் பயிலுனர்களுக்கு மேலதிகமாக மேலே குறிப்பிட்ட வெளித் தரப்பினரும் நூலகத்தின் சேவைகளை பெற்றுக்கொள்கின்றனர். | புத்தகங்களை எடுத்துச் செல்லல் மற்றும் பயன்பாட்டிற்காக முறையான பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரித்துக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) பெறுமதியில் கூடிய ஏதேனும் விடயத்துறைக்குரிய சில புத்தகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட நபர்களால் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் நிறுத்திவைக்கப்படடிருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன் அது நூலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டு ச்டவிதிகளுக்கு முரணாக செயற்பாடொன்றாக இருந்ததுடன் அவ்விடயத்துறை தொடர்பாக குறைந்த அக்கரை செலுத்தும் வேறு தரப்பினருக்கு புத்தகங்களை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போவது அவதானிக்கப்பட்டது. | (ii) பெறுமதி கூடிய ஏதேனும் விடயத்துறைகளுக்குரிய தான சில புத்தகங்கள் விசேட ஆராய்சீ நடவடிக்கைகளில் ஈடுபடும் பொறியயிலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் வாசிப்பதற்காக பெற்றுக்கொள்வதுடன் எந்தவொரு அப்புத்தகங்கள் தொடர்பாக விசாரித்தால் புத்தகங்களை வைத்திருக்கும் வாசகருக்கு தெரியப்படுத்தி தேவையானவர்களுக்கு புத்தகங்களை பெற்றுக்கொள்வதற்கு | நூலக சட்டவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தரவினை அடிப்படையாக கொண்டு தாமாக தம்மால் எடுத்துச் செல்லப்பட்ட புத்தகங்கள் தொட்பாக நினவூட்டல் கடிதமொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நூலகப் புத்தகங்களை வெளியே எடுத்துச் செல்வதைப் பரீட்சிப்பதற்காக RFID தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரவு முறைமையொன்ற நிறுவதற்காக 2 RFID கதவுகள் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,375,400 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவை பயன்பாட்டின்றி நூலக வளவில் வைககப்பட்டுள்ளதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | RFID நூலக தானியங்கி RFID – (LAS) முறைமை ஆதர் சீ கிளார்க் நிறுவகத்தினால் சர்வதேச ரீதியில் திறந்த மூலவள நூலக முறைமையொன்றுக்கு KDHA (தரவு குழுமமொன்றாக) அபிவிருத்தி செய்யப்பட்டது. செயற்திட்ட இயக்கத்தில் பரீட்சார்த்த செயற் திட்டமொன்றாக ஆதர் சீ கிளாக் நிறுவகத்திற்கு நூலகத்திற்கு ஈடுபடுத்தப்பட்டது. ஆதர் சீ கிளார்க் நூலகத்தில் பயன்படுத்தப்படும் முகாமைத்துவ மென்பொருள் PURNA மென்பொருளாகும். (தனியார் கம்பனியொன்றினால் உள்நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட இணைப்பு முறைமையொன்றாகும். KOHA மற்றும் PURNA தரவு தள | தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு கொள்வனவு இடம்பெற வேணடியதுடன் கொள்வனவு செய்த பொருட்களை குறித்த செயற்பாட்டிற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முகாமைத்துவ முறைமைகளில் நூலக புத்தக களஞ்சியத்தில் அறிக்கையிடப்பட்ட துறைகளுக்கு இடையே வேறுபாடுகள் பல காணப்பட்டதால் நூலகத்தில் RFID LAS ஆதர் சீ கிளார்க் நிறுவனகத்தின் நூலகத்திற்கு நேரடியாக ஒன்றிணைத்தல் நடைமுறையில் இடம்பெறாது. | |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மென்பொருட்களின உரித்ததுடைய நிறுவன மொன்றிடமிருந்து ரூபா 6,263,252 பெறுமதியான 04 மென்பொருட்களை நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறான மென்பொருள் கொள்வனவு சந்தர்ப்பத்தின் போது உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் மென்பொருளின் உரித்தினை உடைய நிறுவனத்தினால் அம்மென்பொருளை விற்பனை வருமானத்திலிருந்து 10% தொகை மென்பொருள் கொள்வனவு செய்யும் நாட்டிற்கு வருமான வரியாக செலுத்த வேண்டிய போதும் அந்நிபந்தனைகள் தொடர்பாக கூறுவிலை வழங்கும் சந்தர்ப்பத்தில் கூறுவிலை பதிவேட்டில் குறிப்பிடப்படாமையால் 02 மென்பொருளுக்காக குறித்த உற்பத்தி நிறுவனம் ரூபா 695,918 தொகையான வரித்தொகை கொடுப்பனவை நிராகரித்திருந்தது. இதன் காரணமாக ரூபா 695,918 ஆன வரித்தொகை ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தினால் இறைவரித் திணைக்களத்திற்கு (உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்கிடலின் பிரகாரம்) | மென்பொருள் கொள்வனவிற்காக சர்வதேச ரீதியான கொடுப்பனவு செய்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட வரி விடுவிப்பொன்று சான்றிதழொன்று தேவையென இலங்கை வங்கியால் குறிப்பிடப்பட்டதுடன் கேள்வி கோரும் சந்தர்ப்பத்தல் அத்தேவைப்பாடு கேள்வி நிபந்தனைகளுக்கு உள்ளடக்கப்படவில்லைஅயெ இலங்கை வங்கியால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இவ்வாறான கொடுககல் வாங்கல்களின் போது குறித்த கொடுப்பனவு மற்றும் வரி உரித்தாதல் தொடர்பாக முன்னரே அறிந்து கெள்ளல் நிறுவகத்திடம் இல்லாமையால் இம்மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ள நேர்ந்தது. எனினும் எதிர்காலத்தில் இவ்வாறான சர்வதேச மட்டத்திலான கொடுக்கல் வாங்கலொன்று மேறகொள்ளும் நடைமுறையொனற முறையாக ஆய்வு செய்யப்பட்டு குறித்த ஆவணங்களைத் தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டல் தொடர்பாக முறையாக ஆய்வு செய்து கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் வழஙங்குனரிடிரு ந்து அறவிடப்பட வேண்டியவ ரி வருமானம் உரிய வகையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது 17 வெற்றிடங்களுக்காக ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதி வரை அவர்களுக்கு இடையே மூன்று ஊழியர்கள், (02 சாரதிகள, பொறியியலாளர் உதவியாளர்) சேவையிலிருந்து விலகியுள்ளதாக அவதானிக்கப்பட்டது. இதறகு மேலதிகமாக நேர்முக பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இடையே இரண்டு விண்ணப்பதாரிகள் (வேலை அத்தியட்சகர் மற்றும் அலுவலக உதவியாளர்) சேவைக்கு அறிக்கையிடாமை அவதானிக்கப்பட்டது. நிறுவகத்திற்கு பொருத்தமான ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் ஊழியர்களை நிறுத்திவைப்பதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்று தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்திற்கு ஊழியர்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது நேர்முக பரீட்சை சபையொன்று மூலம் விண்ணப்பதாரிகளின் இலக்கு மற்றும் நிறுவகத்தின் பின்னணி கருத்திற்கொண்டு முறையான வகையில் மேற்கொளளப்படுகின்றது. எனினும் நிறுவகத்தின் சம்பள கட்டமைப்பு மற்றும் ஏனைய நலன்கள் அது தொடர்பாக தனியார் துறையின் தொழில் மற்றும் போட்டி போன்ற விடயங்களைக் கருத்திற் கொள்ளும் போது போதியதாக இல்லாமல் இருப்பதால் ஆட்சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நீண்டகாலம் நிறுத்திவைத்தல் சிரமமான விடயமொன்றாகும். அவ்வாறே ஏனைய தொழில்கள் மற்றும் வெளிநாடுகளில் உயர்கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கும் காரணத்தினால் குறுகிய காலத்தில் அவர்கள் சேவையை விட்டுச் செல்லும் போக்கு நிறுவனம் வருடாந்தம் முகங்கொடுத்து வந்தது. | ஊழியர்களை நிறுவகத்தில் நிறுத்திவைப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 மார்ச் 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நிறுவகத்தினால் வெற்றிடங்களாக காணப்படும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன் வெற்றிடங்களுக்காக அங்ககாரத்தின் பொருட்டு தொடர்புபடுத்திய எண்ணிக்கை காணப்படும் எண்ணிக்கையை விட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆராய்ச்சி பொறியியலாளர், பொறியியலாளர் உதவியாளர், இலத்திரனியல் பொறியியலாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அங்கீகாரத்திற்கு அனுப்பும் போது தற்போது நிறுவகத்தில் நிறவகத்தில் கடமைகள் தடைப்படாத வகையில் பேணிச்செல்வதற்காக போதியளவு மற்றும் அத்தியவசிய வெற்றிட எண்ணிக்கைகள் மாத்திரம் நிறுவகத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் | நிறுவகத்தின் இலக்கை நோக்கி அடையும் போது தேவையான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டது. | |
| (இ) | 2018/07/13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கியிருந்த சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி பதவிக்காக உத்தியோகத்தரொருவரை சேர்ப்பதற்கும் 05 ஆண்டுகளாக வெற்றிடமாக காணப்படும் புத்தக கட்டுநர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கும் நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>2018/12/31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக கணக்கு வைக்கும் செயற்பாடு தனியார் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டு ரூபா 90,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2018/07/13 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 10 பதவிகளுக்காக அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் நிறுவகத்தின் கடமைகள் தடைப்படாமல் நடாத்திச் செல்லும் தேவைப்பாட்டின் பேரில் விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டு ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் தேர்தல் காலங்களின் பின்னர் சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கும் புத்தக கட்டுநர் பதவிக்காக 2020 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் உரிய அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன் அது கிடைத்ததன் பின்னர் குறித்த ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |